# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075253

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் VELLORE | PS: காவல்நிலையம் VIGILANCE AND ANTI CORRUPTION VELLORE | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 16/2020 | Date: நாள் 20.11.2020

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 — Sections பிரிவுகள்: Sec 7
   (ii) Act சட்டம்: as amended by — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: PC (AMENDMENT) ACT 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 19.11.2020 | Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு — | Time from : நேரம் முதல் 17.10 Hrs | Time to : நேரம் வரை 21.30 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020 | Time : நேரம் 12.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-2 | Time : நேரம் 12.30 Hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint (in Tamil)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Sholinghur Sub-Registrar Office
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Approximately 65 Kms, North East
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Mr. S. Jothi | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Mr. Sampath
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Deputy Inspection Cell officer | (g) Address : முகவரி Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. A. Arul Age(40/20) S/o Arumugam
   Sub-Registrar, Grade-I, Sholinghur Sub Registrar Office
   Registration District, Arakkonam. Ranipet District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — No Delay —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate Sheet Attached —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/11/20.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
M. RAJANIKANTH
INSPECTOR OF POLICE
Name: பெயர் V&AC VELLORE
Rank: நிலை ..................No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.11.2020 at 13.30 Hrs

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**SUBMITTED:**

இன்று 20.11.2020-ஆம் தேதி பகல் 12.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு. S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இரு துறை திடீர் கூட்டு சோதனை – இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பதிவு மாவட்டம், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 19.11.2020 அன்று இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம், ஆவணம் மற்றும் செயல்முறை – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். நேற்று 19.11.2020-ஆம் தேதியன்று மாலை சுமார் 15.15 மணியளவில் நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரியும் திரு.அருள் என்பவர் பத்திரப்பதிவுகளை மேற்கொள்வதற்காக டாகுமெண்ட் ரைட்டர்கள், பொது மக்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் கட்டாயப்படுத்தி அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூல் செய்வதாகவும், மேலும், சார் பதிவாளர் திரு.அருள் என்பவர் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்காக பெறப்பட்ட லஞ்சப்பணத்தை வாங்கிக்கொண்டு அவருக்கு சொந்தமான பதிவு எண்.TN 73 AZ 7266 Maruthi Swift Dzire வெள்ளை நிற காரில் வீட்டிற்கு கொண்டு செல்வதை வழக்கமாக கொண்டிருப்பதாக எனக்கு வந்த நம்பகமான தகவலின் பேரில், நான் நம்பகமான தகவலாளர்கள் மூலம் அதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு தெரியப்படுத்திய பின் நேற்று 19.11.2020-ஆம்தேதி மாலை 15.45 மணியளவில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.ரஜனிகாந்த் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு, மேற்படி சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 16.50 மணிக்கு வந்தபோது, அவ்வலுவலகத்தில் இருந்து TN 73 AZ 7266 Maruthi-Swift Dzire வெள்ளை நிற கார் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வெளியில் புறப்பட்டு சென்றது. மேற்படி காரை அரசு வாகனத்தில் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் ஆகிய நாங்கள் தொடர்ந்து சென்றபோது, மேற்படி காரானது சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தள்ளி, சோளிங்கர்-அரக்கோணம் செல்லும்

சாலையில் உள்ள ஸ்ரீசுப்ரமணிய திருமண மண்டபத்திற்கு சற்று முன்பு நின்றது. அப்போது மாலை சுமார் 17.10 மணி ஆகும். அச்சமயத்தில் பதிவு எண்.TN 73 AB 5554 கொண்ட Honda Unicorn கருப்பு நிற இரு சக்கர வாகனத்தில் ஒரு நபர் அந்த காரின் ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் உள்ள முன் இருக்கையில் ஏறி அமர்ந்து, ஓட்டுனர் இருக்கையில் இருந்த நபரிடம் எதையோ எடுத்து கொடுத்தார். அச்சமயத்தில் மேற்படி காரை நானும், காவல் ஆய்வாளர் திரு.M.ரஜனிகாந்த் மற்றும் சோதனைக்குழுவினர் அணுகியபோது அந்த காரில் ஓட்டுனரும், இரு சக்கர வாகனத்தில் வந்த நபரும் இருந்தனர். அந்நபர்களிடம் திடீர் சோதனைக்குழுவினர் ஆகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, ஓட்டுனர் இருக்கையில் இருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் A.அருள் என்றும், தந்தையார் பெயர் ஆறுமுகம் என்றும், தான் சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக சுமார் இரண்டு வருட காலமாக பணிபுரிந்து வருவதாகவும், தான் தன்னுடைய குடும்பத்துடன் அரக்கோணத்தில் உள்ள ஜெயம் நகரில் வசித்து வருவதாகவும் சொன்னார். மேற்படி காரில் இடது புற முன் இருக்கையில் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் S.பார்த்தசாரதி என்றும், தந்தையார் பெயர் சுகுமாரன் என்றும், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தொகுப்பூதியத்தில் Data Entry Operator-ஆக பணிபுரிந்து வருவதாகவும், தான் தன்னுடைய குடும்பத்துடன் ஆற்காடு வேப்பூரில் வசித்து வருவதாகவும் சொன்னார். மேற்படி நபர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் ஆகிய நாங்கள் வந்த நோக்கத்தையும் கூறி, எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் திரு.A.அருள் மற்றும் S.பார்த்தசாரதி ஆகியோரின் உடல் வெப்பநிலையை தெர்மல் ஸ்கேனர் கொண்டு சோதிக்க, அவர்களுக்கு 96.5 மற்றும் 97.1 முறையே உடல் வெப்பநிலை இருந்தது. பின்னர், மேற்படி காரில் வந்த திரு.A.அருள் அவர்களை நான் சோதனையிட அவரது சட்டையின் மேல் இடப்புற வெளிப்பாக்கெட்டில் பணம் ரூ.1,000/- இருந்தது. பின்னர், திரு.A.அருள் உட்கார்ந்திருந்த இருக்கைக்கு பின்புறம் கீழே கால் வைக்கும் இடத்தில் ஒரு கவரில் ரூ.6,600/- இருந்தது. மேலும், மேற்படி காரின் டிரைவர் சீட்டிற்கு கீழே பணம் ரூ.2,800/- இருந்தது. மேற்படி திரு.அருள் என்பவரிடம் மேற்படி பணம் ரூ.1,000/-, ரூ.6,600/- மற்றும் ரூ.2,800/-குறித்து விசாரிக்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, மேற்படி பணம் ரூ.10,400/- கைப்பற்றப்பட்டது. மேலும், சார் பதிவாளர் திரு.அருள் என்பவரிடம் TN 73 AZ 7266 Maruthi Swift Dzire வெள்ளை நிற காரை பற்றி விசாரிக்க, அந்த காரனது தன்னுடையது என்றும், தன்னுடைய மனைவி திருமதி.வேதா என்பவரின் பெயரில் உள்ளதாகவும், தான் தினமும் அரக்கோணத்திலிருந்து சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தனது காரில்தான் வந்து செல்வதாக சொன்னார். பின்னர், Data Entry Operator S.பார்த்தசாரதி

என்பவரை சோதனை செய்ய, அவரது வலது பக்க வெளிப்புற சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.1,500/-ம், பின்புற பேண்ட் பாக்கெட்டில் ஒரு பிரவுன் நிற கவரில் ரூ.5,200/- இருந்தது. மேற்படி திரு.பார்த்தசாரதி என்பவர் வைத்திருந்த பணம் ரூ.1,500/- மற்றும் ரூ.5,200/- குறித்து அவரிடம் விசாரிக்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, மேற்படி பணம் ரூ.6,700/- கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.A.அருள் வந்த மாருதி ஸ்விப்ட் டிசைர் காரை சோதனை செய்ய, அதில் டாகுமெண்ட் நெம்பர்.2984/2020, நாள்:19.11.2020 என்ற அசல் பத்திர ஆவணம் இருந்தது. மேற்படி பத்திர ஆவணத்தை பற்றி சார் பதிவாளர் திரு.அருள் என்பவரிடம் கேட்க, திரு.A.அருள் அந்த பத்திர ஆவணத்தில் தன்னுடைய கையெழுத்து விடுபட்டதால், மேற்படி ஆவணத்தில் தன்னிடம் கையெழுத்து வாங்க திரு.S.பார்த்தசாரதி கொண்டு வந்ததாக சொன்னார். பின்னர், மேற்படி காரை சோதனை செய்ய, அந்த காரில் பணம் எதுவுமில்லை. மேற்படி சோளிங்கர்-அரக்கோணம் சாலையானது போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி என்பதாலும், அவ்விடத்தில் செயல்முறை தயார் செய்ய போதுமான வசதி இல்லாத காரணத்தினாலும், திரு.A.அருள் மற்றும் திரு.பார்த்தசாரதி ஆகியோர்களை அதே காரில் சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 17.35 மணிக்கு அழைத்து செல்லப்பட்டது. அப்போது சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களும், சில பேர்களும் இருந்தனர். அவர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் ஆகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, நாங்கள் வந்த நோக்கத்தையும் கூறி, சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், அலுவலகத்தில் இருந்த கீழ் கண்ட நபர்களை சோதனை செய்து தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் தக்க முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட விவரம்:

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்ட முகாந்திரம் கூற இயலாத பணம் | தக்க முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட பணம். |
|---|---|---|---|
| சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் | | | |
| 1. | திரு.P.கஜேந்திரன் (56/2020) த/பெ பரசுராமன், உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம்.<br>**வீட்டு முகவரி:** எண்.1/38, பிள்ளையார் கோவில் தெரு, வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம். | ... | ரூ.660/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | திருமதி.A.பர்கத் நிஷா (33/2020)<br>த/பெ அப்பாஸ், இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம்.<br>**<u>வீட்டு முகவரி:</u>** கச்சால நாயக்கர் தெரு, வாலாஜாபேட்டை,இராணிப்பேட்டை மாவட்டம். | ... | ரூ.450/- |
| 3. | திருமதி.P.ஷர்மிளா (37/2020)<br>க/பெ ஆனந்தன், கேமிரா ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம்.<br>**<u>வீட்டு முகவரி:</u>** எண்.894, கீழாண்டை தெரு, மணியம்பட்டு, தெங்கால், இராணிப்பேட்டை மாவட்டம். | ... | ரூ.690/- |
| டாகுமெண்ட் ரைட்டர், இடைத்தரகர் மற்றும் பொது மக்கள் | | | |
| 4. | திரு.N.கேசவன் (62/2020)<br>த/பெ நரசிம்மன், எண்.144, பெரிய தெரு, மூதூர் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். | ரூ.2,000/- | திரு.கேசவன் என்பவரை விசாரணை செய்ய, அவர் இவ்வலுவலகத்தில் டீ, காபி வாங்கித்தந்து வருவதாகவும், சார் பதிவாளர் சொல்லும் வேலையை செய்து வருவதாகவும் சொன்னார். சார் பதிவாளர் அவர்கள் தனக்கு தினந்தோறும் ரூ.100/- தருவதாக சொன்னார். |
| 5. | செல்வி.S.சந்தியா (21/2020)<br>த/பெ சபாபதி, எண்.2/308, எம்.ஜி.ஆர் தெரு, பள்ளிப்பட்டு, சுந்தராஜபுரம் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். | ... | ரூ.650/- |
| 6. | திரு.D.கோவிந்தராஜ் (47/2020)<br>த/பெ தண்டபாணி, ஆவண எழுத்தர் (B1087/AKM/93), எண்.37/1, எம்.எம்.நகர் 2-வது தெரு, சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம். | ரூ.1,000/- | ... |

| | | | |
|---|---|---|---|
| 7. | திரு.S.மணி (50/2020), த/பெ சுப்பிரமணி, எண்.348, பெரிய தெரு, கொடைக்கல், சோளிங்கர் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். (**Real Estate Broker**) | ரூ.24,000/- | ... |

மேலும், சார் பதிவாளர் மேஜை மற்றும் அலுவலக அலுவலர்களின் மேஜைகள் மற்றும் அனைத்து இடங்களிலும் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. படைவீரர் கொடிநாள் வசூல் தொகை பணம் ரூ.3,500/- இருப்பில் உள்ளது. அதற்குண்டான அடிக்கட்டை வரிசை எண்.1638801 முதல் 1638900 உள்ளது. மேலும், ரூ.500/-க்குண்டான படைவீரர் கொடிநாள் வசூல் இரசீது புத்தகம் வரிசை எண்.0247001 முதல் 0247050 எதுவும் கிழிக்கப்படாமல் அப்படியே உள்ளது. மேலும், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக நிரந்தர இருப்பு தொகை ரூ.250/- இருப்பில் உள்ளது. பின்னர், சார் பதிவாளர் திரு.A.அருள் என்பவரிடம் அவரது காரில் இருந்த டாகுமெண்ட் நெம்பர்.2984/2020, நாள்:19.11.2020-ன் நகல், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக பணியாளர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேடு, சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு, CAMERA OPERATOR திருமதி.ஷர்மிளா என்பவரின் வருகைப்பதிவேடு, DATA ENTRY OPERATOR திரு.பார்த்தசாரதி என்பவரின் வருகைப்பதிவேடு, சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு, சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக பணியாளர்கள் நடமாட்ட பதிவேடு, சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக தாமத வருகைப்பதிவேடு, 19.11.2020-ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட 20 ஆவணங்கள் தமிழ்நாடு பதிவுத்துறையின் tnreginet.gov.in என்ற வெப்சைட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டதின் பிரிண்ட் அவுட் ஆகியவற்றை கேட்டு பெற்று பார்வையிட்டு, அந்த 9 ஆவணங்களின் தேவையான பக்கங்களில் நானும், காவல் ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் மற்றும் சார் பதிவாளர் திரு.அருள் ஆகியோர் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி 20 பதிவுகளின் மூலம் அரசிற்கு பணம் ரூ.2,28,117/- ஆன் லைன் மூலம் ஆவணதாரர்கள் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலகத்தில் பொது மக்களால் செய்யப்படும் பணப்பரிவர்த்தனை அனைத்தும் ஆன் லைன் மூலமாக நடைபெறுவதாகவும், எதற்காகவும் பணத்தை நேரிடையாக வசூலிக்கப்படுவது கிடையாது என்று சார் பதிவாளர் திரு.அருள் அவர்கள் சொன்னார். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.44,100/- மற்றும் 9 ஆவணங்களும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 19.11.2020-ஆம் தேதி மாலை சுமார் 17.10 மணிக்கு துவக்கி இரவு சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர் கூட்டு

சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும். காவல் ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் மற்றும் சார் பதிவாளர் திரு.அருள் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திரு.A.அருள், சார் பதிவாளர் நிலை-1, சார் பதிவாளர் அலுவலகம், சோளிங்கர், அரக்கோணம் பதிவு மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவருக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, பத்திரப்பதிவுகளை மேற்கொள்வதற்காக லஞ்சமாக பெற்றதாக கருதப்படும் பணம் ரூ.44,100/-, ஒன்பது பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். எனவே, திரு.A.அருள், சார் பதிவாளர் நிலை-1, சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் பதிவு மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒம்/- XXXXXXX (S. ஜோதி) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம்.

Sir,

Received the complaint on 20/11/20 at 12.30 hrs and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.16/2020 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sd/-XXXXXX (M.RAJANIKANTH), Ins/V&AC/Vellore.

The FIR in original along with the complaint, Joint Surprise Check Proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the officers concerned.

20/11/20

*Inspector of Police*
Vigilance & Anti-Corruption
Vellore - 1.